


எ.சி.டிசில்வா, வெலிங்டன், ஊட்டி.

கைப்பேசி எண்: 9025029593

இறைவா

நேற்றைய கவலைகளும் வேண்டாம்

நாளைய கனவுகளும் வேண்டாம்

இன்றைய பொழுது உன் ஒளியில் கடந்திட அருள் தாரும்.

# "என்னோடு என் சிலுவை"

நண்பர்களே!

நமது ஆண்டவர் இயேசுவை இதோ ஆண்டவர் என்று கூறுவதை விட, என், எனது, நம், நமது - ஆண்டவர் - என நெஞ்சம் நிறைந்துக் கேட்போர் மகிழக் கூறுகின்றோம் உண்மை. அதே நேரம் கண்முன் நிற்கும் ஆண்டவரின் திருச்சிலுவையை மட்டும் இதோ ஆண்டவரின் சிலுவை என அந்நியப் படுத்துகின்றோம். இது நியாயமா?

என், எனது, நம், நமது என்று மனித உறவை - உரிமையைப் பறைசாற்றும் இந்தக் குரல்கள் திருச்சிலுவையின் முன் எங்கே மறைந்தது.

சொத்துக்கள் வேண்டும், சுகங்கள் வேண்டும் - ஆனால் சொந்தங்கள் வேண்டாம். உடமைகள் வேண்டும், அதற்கான உரிமைகள் வேண்டும் ஆனால் உறவுகள் வேண்டாம். என்ற நான் - என் மக்கள் - என் உலகம் - என் இறைவன் - என்ற நான்கு சுவர்களுக்குள் அவை மறைந்துப் போயின.

எழுவோம் - வெளிப்படையாக மறைவுகளை அகற்றி என்னோடு என் சிலுவை என்று நிற்கும் நமது உடமையை — உரிமையை - உணர்ந்துப் பெற்றுக் கொள்வோம். எளிமையான சுமையாகக் கண் முன் நிற்கும் இந்த மகிமையான திருச்சிலுவையைப் பாருங்கள்.

"என் சுகம் எளிது, என் நுகம் இனிது" என்ற வார்த்தைகளுக்கு ஏற்ப இறைமகன் மன்னிப்பு - இறை இரக்கம் என்ற நெடுமரமாக எளிமையான சுமையாக உயர்ந்து — குறுக்கே - பரமபிதாவின் அன்பு, ஆவியானவரின் அபிஷேக அரவணைப்பு என்று இனிமையான நுகத்தடிகளுடன் விரிந்து, திரித்துவமே திருச்சிலுவையாகக் காட்சித் தருகின்ற அழகை பாருங்கள்.

பின் தயக்கம் ஏன்? திரும்பிப் பார்க்காதீர்கள். கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பார்ப்பவன் தகுதியற்றவன் என்பது இறைவாக்கு. நாளை என்பது நமக்கு இல்லை ஏனெனில் அஃது ஆயத்த நாள், அன்று ஒன்றும் செய்ய முடியாது. எனவே இன்றே இப்பொழுதே மனமாற்றம் என்ற சம்மட்டியால் தடை என்ற சுவர்களைத் தகர்த்து விரைந்துப் பயணித்து வெற்றிக் கனியாம் மீட்பை நமதாக்குவோம்.

நமது சொத்தாகச் சொந்தம் கொண்டாடுவோம். அதே வேளையில் பிறர்சிநேகம் என்ற சுகத்தில் நாமும் நம் அயலானும் ஆண்டவரில் அகமகிழ்வோம்.

இவன்

உங்கள் அயலான்

சமர்ப்பணம்.

இந்தச் சிந்தனைகள்

தமிழகத் திருச்சபையில்

நீலகிரியில்

இறைபணியும் கல்விப் பணியும்,

செய்து 60 ஆண்டுகள் பூர்த்திச்

செய்து வைரவிழா கண்ட

அன்னாள் சபையைச் சார்ந்த

**அருட் சகோதரி ஜோசபா**

**புனித அன்னாள் கான்வென்ட், அரவங்காடு**

நீலகிரி மறைமாவட்டம்

# அவர்களுக்குச் சமர்ப்பணம்.

## முதல் நிலை:- "இயேசுவைத் தீர்ப்பிடுகின்றனர்".

திவ்ய இயேசுவே.....................

ஆண்டவர் இயேசு உலகிற்கு அடையாளப்படுத்தப் படுகின்றார்

தீர்ப்பு என்பது என்ன? ஒரு சமூகம் ஒருவரை அவர் இன்னார், இப்படிப்பட்டவர் என்று மனுதர்மத்திற்கும் , இறைவனுக்கும் கட்டுப்பட்டு, அறிக்கையிடுவது தான் - தீர்ப்பு எனப்படும்.

மேற்குறிப்பிட்ட ஒரு சூழலில், உரோமை பிரதிநிதி பிலாத்து, இயேசுவை யார் என்று அறிந்து - அறிக்கையிட, அவர் முன் நின்ற யூத மத குருக்கள், பரிசேயர், சதுசேயர், யூத மக்கள், - அவருடைய படைவீரர்கள் இன்னும் அதிகாரத்தில் இருந்த ஏரோது - கடைசியாக அன்பு மனைவி என விசாரித்தும், நிறைவு பெறாமல் தானே - இறைமகன் இயேசுவிடம் பல கேள்விகளைக் கேட்டு, முடிவாக முற்றத்தில் நின்று அறிக்கையிட்டார். - யோவான் 19ன்படி "பாருங்கள் இதோ மனிதன்" எனத் தீர்ப்பிட்டார்.

இன்றும் கூட, நாம் ஒருவர் சொல்லும் ஓர் உறுதிமொழியை வைத்தோ, அல்லது சிறப்பாக அவர் செயல்பட்டதை முன்னிலைப்படுத்தியோ, அவர்களை ஊரறிய "பாருங்கள் இவன் மனிதன் அல்லது இவள் மனுஷி"' என்று கூறுகின்றோம்.

ஒரு கூட்டத்தில், நீங்கள் யார் என்று கேட்டபோது, ஒருவர் கூட நான் இறைவனின் உன்னதபடைப்பான 'மனிதன்' என்று கூறவில்லை, மாறாக, தங்களுடைய பெயராலும், சாதிகளாலும், செய்யும் தொழிலாலும், மதங்களாலும் மொழிகளாலும் - தங்களை அடையாளப் படுத்தினார்கள்.

இறைவனுக்குக் கீழ்படிதலும், மனிதர்களுக்கு அன்பும் கொண்டு - இயேசு வாழ்வதைக் கண்டப் பிலாத்து, அவரை "மனிதன்" எனத் தீர்ப்பிட்டார். நமது திருச்சபை நம்மை இறைமக்கள் என்று அழைக்கின்றது. உலகமோ கிறிஸ்தவர்கள் என்று அறிக்கையிட ஆசைப்படுகின்றது. ஆனால் - நாமோ நம்மைப் பாவி என்று தீர்ப்பிட்டு இவர்களை விட்டு, தள்ளி நிற்க -விழைகின்றோம்.

யூதாசையே இறைமகன் "நண்பா" என்று தான் அழைத்தார். யூதாசு நண்பன் என்றால் - நிச்சயம் இயேசுவிற்கு நாம் பாவிகள் அல்ல , மாறாக நாம் அவரது நண்பர்கள். இயேசுவைப் போல் நமது அயலானை நண்பர்களாக நாம் அடையாளம் கண்டால், உலகம் நம்மை, இவர்கள் தான் மனிதர்கள் - எனத் தீர்ப்பிடும். இந்தப் பாக்கியத்தைப் பெற இறைவனுக்குக் கீழ்படிதலும், அயலானுக்கு அன்பும் கொண்ட வாழ்வைப் பெற்றிட முழந்தாளிடுவாம்.

**செபம் :-** இறைவா உமக்குக் கீழ்படிதலையும் , அயலானுக்கு அன்பையும் பகிர்ந்திட - எங்களை வழி நடத்தும் !

எங்கள் பேரில் தயவாயிரும்...

## 2-ம் நிலை:- "பாரச் சிலுவையை இயேசுவின் தோள் மீது சுமத்துகின்றனர்"

திவ்ய இயேசுவே…

"இனிப்பான பயணத்திற்கு எளிதான சுமை அவசியம்"

"கழுதைக்கு வந்த வாழ்வைப் பாருங்கள்" என்றும் "பூவுடன் சேர்ந்த நாறும் மணம் பெறும் என்றும்" தமிழில் முதுமொழிகள் உண்டு. ஆம் இன்று விவிலியத்தில் சுமை சுமக்கும் கழுதைக்கு வந்த வாழ்வைப் படியுங்கள்.

இந்நிகழ்வுகளின் ஏழு நாட்களுக்கு முன்,எருசலேம் நகர வீதிகளில் ஒரு கழுதை நடந்து வர, விரிப்புகள் பாதையெங்கும் விரிக்கப்பட்டன. மக்கள் இரு புறமும் இறைபண் எழுப்பி வரவேற்றனர். ஏன் தெரியுமா? பொதிச் சுமக்கும் கழுதை மீது இயேசு அமர்ந்து வந்தார்-ஆக இயேசுவை கழுதைச் சுமந்ததால் - பூவுடன் இணைந்த நாறானது மணம் பெற்றது.

இயேசு நம்மை நண்பர் என்றார், நண்பர்கள் இணைந்து பயணிக்கும் போது ஒருவர் மற்றொருவர் சுமைகளைப பகிர்ந்து, சுமந்து பயணத்தை எளிமையாக்குவது மரபு. அப்படி இயேசுவை பகிர்ந்து சுமந்தால் - நாமும் மனித நேயம் என்ற எளிமையான பயணத்தைத் தொடரலாம்..

முன் பதிவு இல்லாத பயணம், மிகவும் கஷ்டமானது. ஆலயத்தில் கூட இருக்கை முன்பதிவு முண்டியடித்துச் செய்தவர்களில், சிலர் சிலுவைப் பயணத்தில் கூடத் தொடர்ந்திட யோசிப்பதை நாம் பார்ப்பதில்லையா? இயேசு தனது சிலுவைப் பயணம் சற்று எளிமையானதாக மாறிட அவர் செய்த முன்பதிவு இருக்கையைத் தேடுகின்றார், கவனித்துப் பாருங்கள் சுமையோடு உள்ள இயேசுவிற்கு அந்த முன் பதிவு இருக்கை நமது உள்ளம் என்பதை மறுக்கமுடியுமா?. திறப்போம் நமது இதய முன் பதிவு இருக்கையில் - அவர் அமர்ந்துச் சற்று இளைப்பாறட்டும்.

விவிலியப்படிக் கழுதை யாரைச் சுமந்தது - இயேசுவை. நண்பர்களாகப் பயணிக்கும் போது நாம் யார் சுமையை சுமக்க வேண்டும்? இயேசுவின் சுமையை அஃதாவது "அன்பு , மன்னிப்பு , அரவணைப்பு என்ற சுமைகளை" சுமந்தால் இயேசுவின் கைகளுக்குப் போகும் நமது பாவம் என்ற பாரச்சிலுவை நம்மை விட்டு மறைந்துப் போகும். வெற்றியின் சின்னமாக இயேசுவின் கரங்களுக்கு அழகு சேர்க்கும். மாற் -2:31ல் பேதுருவின் மாமியாரின் கையை இயேசு பிடித்தவுடன் அவர் குணம் பெற்றார் எனப் படிக்கின்றோம். பயணத்தில் இயேசுவின் கரம் நம்மோடு கரம் கோர்த்தவுடன் நமது பாவங்கள், பாரங்கள், அகலும். நாமும் நம் அயலானுக்கு - இயேசுவிற்குப் பணிவிடைச் செய்ய முடியும்.

குறைந்த சுமை எளியப் பயணம் என்பதற்கு இணங்க என் சுமை எளிது என்ற எளிமையான இயேசுவை - இயேசுவின் சுமையைத் தாங்கும் சுமைதாங்கிகள் ஆவோம்.

**செபம் :-** என் சுமை எளிது என்ற என் தேவனே! அன்பு அரவணைப்பு என்ற இனிமையான உன் நுகத்துடன் அயலானைச் சுமந்து பயணிக்க அருள்தாரும்.

எங்கள் பேரில் தயவாயிரும்…

## 3-ம் நிலை "முதல் முறை இயேசு கீழே விழுகிறார்".

திவ்ய இயேசுவே...

"நமது பயணத்தில் இறை வார்த்தையை கண்டும், காணாமலும், கேட்டும் கேளாமலும் போனது தான் நமது முதல் வீழ்ச்சி "

அன்று இறைமகன் நமக்காக விழுந்தார்இது நமது மனக் கவலை, இன்று நமது பயணத்தில் நாம் வீழ்ந்து விடுகின்றோம் என்பது தான் இறைமகனின் இன்றைய - மனக் கவலை. இறைமகனின் மனக்கவலையை போக்க என்ன வழி. வார்த்தையின் படி வாழ்கை பயணத்தை தொடர்பவர்கள் தான் தடுக்கி விழவும் வாய்ப்பு உண்டு. மத்-18-17-ன் படி இடறல் வந்தே தீரும் என்பதும் உண்மை.

இறைமகன் பார்வையில் கோதுமை மணி மண்ணில் வீழ்வது 100 மடங்கு பலன் தருவதற்காகமட்டுமே. (யோவான் -12.24) இறை மகன் நமக்கு இரண்டு வாய்புகளை ஒன்று கோதுமை மணி அல்லது நல்ல நிலம் என்று தருகின்றார். இரண்டுமே 100 மடங்கு பலன் தருபவை.

சீடர்கள் இரவு முழுவதும் உழைத்தும் மீன்கள் கிடைக்கவில்லை, அதே வேளையில் அவர்களுடைய செவிகளில் விழுந்த இறை வார்த்தையை மனதில் ஏற்று கீழ்படிந்த போது - வலை கிழியும் அளவிற்கு மீன்கள் கிடைத்தது. (லூக்கா5:5).

இத்தகைய பேய்களை எங்களால் ஓட்ட முடியவில்லையே? என்ற சீடர்களின் தோல்வியின் ஏக்கத்தில்தான் இயேசுவின் வார்த்தை மத்-17:2ன் படி இறை வேண்டல், நோன்பு இவைகளின் வல்லமையை எடுத்துக் கூறி அவர்களுடைய உள்ளத்தை விசுவாச வாழ்வின் பண்பட்ட நல்ல நிலமாக மாற்றி வளமான எழுச்சியை தந்தது.

முடிவாக மத்-7-14-ல் வாழ்வுக்குச் செல்லும் வாயில் மிக இடுக்கமானது, வழியும் குறுகலானது. இதை கண்டுபிடிப்போர் வெகுசிலரே என எடுத்துக் கூறுகின்றது. இது நமது தடுமாற்றத்தை மீண்டும் நினைவு படுத்துகிறது.

இந்த தடுமாற்றங்கள் இல்லாத பயணம் தொடர நாம் நம் மீது விழுகின்ற இறை வார்த்தையை முழுமையாக உள் வாங்க வேண்டும். அடுத்து உள் வாங்கிய வார்த்தைகளால் உள்ளத்தை பண்படுத்தி பண்பட்ட நிலமாக மாற்ற வேண்டும்.

இந்த வார்த்தை வழி வாழ்வு நம்மை மட்டுமல்ல நம்மோடு இணைந்திருப்போரையும் தடுமாற்றம் இன்றி வாழ்வை கண்டடைய உறுதி தரும்.

**செபம் :-** உமது வார்த்தையை கண்டும் காணாமலும் கேட்டும் கேளாமலும் போனதிற்கு மனம் வருந்துகின்றோம். உமது வார்த்தையே எம் வாழ்வு என்பதை உணர்கின்றோம். எழுந்திட உறுதியை தாரும்.

எங்கள் பேரில் தயவாயிரும்....

## 4-ம் நிலை " இயேசு தனது அன்னையை சந்திக்கின்றார் "

திவ்ய இயேசுவே...

"நம்பிக்கையின் மறுபக்கம் அன்னை மரியாள்"

கரடு முரடான கல்வாரிப் பாதையில் தடுமாற்றம் கண்ட இயேசு "இறை நம்பிக்கையின் மறுபக்கமான" அன்னை மரியாளை சந்திக்கின்றார். இறை சித்தத்தை நிறைவேற்ற அன்னையின் அனுபவ இறை நம்பிக்கையை மீண்டும் பெற்று, தனது பயணத்தை தொடர்கின்றார்.

எனது நேரம் இன்னும் வரவில்லை (யோவான்2:4) என்று கூறிய தன்மகன் மீது அன்னையவள் கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கையின் வெளிப்பாடாக கல்யாணப்பந்தியில் பணியாளர்களைப் பார்த்து, அவர் உங்களுக்குச் சொல்வதையெல்லாம் செய்யுங்கள் என்றார் (யோவான் 2:5) தண்ணீரும் திராட்சை ரசம் ஆனது.

தயக்கமும், தடுமாற்றமும் தன்னை ஆட் கொண்ட போது இறைமகன் இயேசு, இறைநம்பிக்கையின் முழு உருவமாக தனது தாயை கானாவூர் திருமணத்திலும் சரி, இந்த கல்வாரிப் பாதையிலும் சரி, கண்டு - தனக்குள் நம்பிக்கையும், எழுச்சியும் பெற்று, இறை சித்தத்தை முழுமையாக நிறைவேற்றினார்.

இன்று நாம், தயங்கும் போதும், தடுமாறும் போதும், இயேசுவைப் போல் அன்னை மரியாளை "இறை நம்பிக்கையை - உற்றுப்பார்த்து" எழுச்சியையும், உறுதியையும் பெற்று உற்சாகத்துடன் இறை சித்தத்தை நம் தோள் மீது சுமக்கும் வல்லமையை பெற்றிட வாய்ப்பு பெறுகின்றோம்.

இந்த இறை நம்பிக்கையான - அன்னை மரியாள் "அவர் தம் இரக்கம் அவரை அஞ்சுவோர்க்கு தலை முறை முறையாய் உள்ளது" (லூக்கா1 - 50) ஆதலால் உலகை அல்ல, உள்ளத்தை ஆளும் இறைவனை உற்றுப் பாருங்கள் அந்த இறைஇரக்கம் உங்களுள் குடிகொள்ளும் என நினைவுபடுத்துகின்றார்.

இன்று திருச்சபையோ "நம்மை இறைஇரக்க சாட்சிய வாழ்வு" வாழ்ந்திட அழைப்பு விடுக்கின்றது. இறை இரக்கம் ஆன இயேசு நம்மிடம் நமதுசாட்சிய வாழ்வின் அடிப்படையான அன்னை மரியாளை - இறை நம்பிக்கையை நமக்கு அடையாளம் காட்டுகின்றார்.

சாட்சிய வாழ்வு வாழ்ந்திட , இறை நம்பிக்கையாம் அன்னை மரியாளை உற்றுப் பார்ப்போம். அப்போது -அன்னை மரியாளுள் ஒளி வீசிடும், இறை இரக்கம் (இயேசு) நம்மீதும் , நம்மோடு இணைவோர்மீதும் ஒளிர்ந்து - இருள் அகற்ற விளக்குத்தண்டின் மீது - உள்ள விளக்காக நம் அனைவரையும் மாற்றும் என்பது உறுதி.

**செபம் :-** இறை இரக்கத்தின் மக்களாக வாழ்ந்திட, இறை நம்பிக்கையின் - அன்னை மரியின் - நல் மக்களாய் வாழ்ந்திட அருள்தாரும்.

எங்கள் பேரில் தயவாயிரும்...

## 5-ம் நிலை: “சிரோன் ஊரானாகிய சீமோன் இயேசுவிற்கு உதவுகின்றார்”.

திவ்ய இயேசுவே…

உழைப்பவனுக்கு உதவுவது “நிர்பந்தமே என்றாலும்” தொடரும் நிலைவாழ்வு - நிம்மதி தருகின்றது.

படைவீரர்கள் அவரைப் (சீமோனை) பிடித்து, அவர் மீது இயேசுவின் சிலுவையை வைத்து அவருக்குப் பின் அதைச் சுமந்து கொண்டு போகச் செய்தனர் - என்பது மறைவாக்கு (லூக்கா- 28 - 26)

நாள் முழுவதும் தனது உணவிற்காக உழைத்து, களைத்து வந்த சீமோன் படை வீரர்களின் அச்சுறுத்தலுக்கும், பலவந்தத்திற்கும் - பயந்து, தன்னையே கஷ்டப்படுத்தி இயேசுவின் சிலுவையை சுமந்தார். “இச் செயல் நிர்பந்தம் என்றாலும், நிலை வாழ்வை சீமோனுக்குத் தந்ததால் நியாயப் படுத்தப்படுகின்றது.

நமக்கும் இந்த நிலை வாழ்வு நமது - விருப்பு, வெறுப்புகளைக் கடந்து திரு முழுக்கின் வழியாக நமது பெற்றோர் மற்றும் திருச்சபையால் தரப்பட்டது. சீமோனுக்கு கிடைத்த வாய்ப்பை ஏற்று அவர் நிலைவாழ்வு சொந்தமாக்கினார்.

நமக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்பை நாம் என்ன செய்தோம் ? அப்படியானால் சீமோனைப் போல் யாருக்காகவோ சுமைகளின் சுமையான பாரச்சிலுவையை நாம் சுமக்க வேண்டுமா? என்று நினைக்கலாமா? “எளிமையான சுமையான இயேசுவை” நாம் சுமந்தால் என்ன நடக்கும் பாருங்கள் - புயற் காற்றில், பேரலையில் சிக்கித் தவித்த படகும் சீடர்களும் அவர்களிடையே இயேசுவை சுமந்த போது (மாற்5:35-41) படகும் சீடர்களும் அமைதி அடைந்தார்கள். நம்மை பிறர் சுமந்தால் நமக்குச் சந்தோஷம் தானே. நம்மை, நமது நற்செயல்களின் பலனை பிறர்சுமக்க அனுமதிக்கலாமா. விண்ணக பயணத்திலும் நாம் சுமக்கக் கூடியது நமது நற்செயல்கள் தான். இந்த செயல்களின் பயன்களால்தான் பிறரோடு உலகில் பகிர்ந்திட முடியும். இயன்றவரை நாமும் சுமப்போம் மற்றவர்களையும் சுமக்க அனுமதிப்போம்.

அன்று வழிப்போக்கனாக சீடர்களுடன் பயணித்த இயேசுவிற்கு ஒரு அழைப்பு - எங்களோடு தங்கும், மாலை நேரமாகின்றது , பொழுதும் சாய்கின்றது - என்று, கட்டாயத்துடன் வந்த அழைப்பு அது (லூக்கா24:29). அந்த அழைப்பு இயேசுவால் ஏற்கப்பட்டபோது சீடர்களின் கண்கள் திறக்கப்பட்டன.

நம்மைச் சுற்றி, பலவிதமான வழிப்போக்கர்கள் - பாதை மாறியவர்கள் - நம்மோடு தங்கியுள்ள இயேசுவை கண்டு மகிழ அவர்கள் கண்கள் திறந்திட அவர்களை நோக்கி நடப்போம் - அப்போது அவர்கள் உள்ளமும் உருகும். சீமோன் உழைத்த களைப்புடன் தான்; இயேசுவின் கல்வாரிப்பாதையில் நடந்து வந்தான். நாமோ இன்று முடிவில்லா வாழ்வைத் தேடும் சட்ட வல்லுனராக லூக்கா 10:25-37 வரை நினைவு கூறப்படும் “கிறிஸ்துவர்களாக” நிற்கின்றோம். ஆண்டவர் இயேசு சட்ட வல்லுனருக்கு “நல்ல சமாரியனாக” - வாழ அழைப்பு தருகின்றார். காயம் பட்டு குற்றுயிரானவரை கண்காணித்து அவர் மீண்டும் நலம் பெற முழுமையாக நம்மைத் தந்துவிட இந்த வாழ்க்கை பயணத்தை தருகின்றார்.

வாழ்வோம் சீமோனாக, பயணிப்போம் நல்ல சமாரியனாக.

**செபம் :-** நான் எளிமையான சுமையாக இயேசுவாக பிறருள் வாழ ஆசைப்படும்போது அந்த பிறராக வாழும் எளிமையான சுமையான உம்மை, நல்ல சமாரியனாகவும் தேவைப்பட்டால் சீமோனாகவும் சுமந்திட அருள் தாரும்.

எங்கள் பேரில் தயவாயிரும்....

**என்னோடு என் சிலுவை -5**

## 6-ம் நிலை:-"வெரோனிக்காள் என்ற பெண் இயேசுவின் முகத்தை துடைக்கிறாள்"

திவ்ய இயேசுவே...

பிறர்தேவைகளை உணர்ந்த பொழுது "நிபந்தனைகள் இன்றி நிறைவேற்று."

இயேசுவிற்கு ஆறுதல் தேவை என உணர்ந்த உடன் செய்து முடித்தாள் வெரோணிக்காள் - இது தான் வெரோணிக்காளின் அடையாளம். பெற்ற நன்மைக்கு பிரதி உபகாரமாக தனது முகத்தின் சாயலை அவளுடைய துணியில் பதித்து, உலகம் வியக்கும் வண்ணம் - அவளை பெருமைப் படுததினார். இது இயேசுவின் அடையாளம்.

அன்று, வெரோணிக்காளின் செயலால் இயேசுவிற்கு கிடைத்தது ஒரு ஆறுதல் மட்டுமே. ஆனால் இன்று கல்வாரி எங்கெல்லாம் காணப்படுகிறதோ அங்கெல்லாம் - அதில் வெரோணிக்காள் காட்சி படுத்தப் படுகின்றாள்.

காலத்தினாற் செய்ய வேண்டிய சிறுஉதவி, எண்ணித் துணிக கருமம் என விரைந்து செய்து முடிக்கப்படுமாயின் - செய்தொழில் வேற்றுமையால் சிறப்பு வந்து சேரும் என்பது மனிதம் அறிந்த உண்மை.

வாருங்கள் நம்மை சற்று ஆராய்ந்து பார்ப்போம். இந்த பெண் போல் "இறைவன் முன் எந்த எதிர்பார்புகள் இல்லாமல்" நம்மால் நிற்க முடியுமா? அல்லது அவருக்காக எதையாவது செய்யதான் முடியுமா?

முடியாதே, காரணம் நாம் வளர்ந்த வழியும், கேட்ட உலக போதனைகளின் மொழியும் - எப்போதும் நமக்காகவும், எப்போதாவது - பிறர்க்காகவும் செயல்படக் கற்று தந்திருக்கின்றன. இப்படிப்பட்ட சுயநல வாழ்வு எப்படி? ஏன் நம்முள் தோன்றியது? தெரிந்து கொள்ள ஆசையா? பாருங்கள்.

எப்பொழுது இறைவன் முன் "நாம் அவருடைய ஆவி, அவரது சாயல் கொண்ட அவருடைய படைப்பு - என்பவற்றை மறந்தோமோ - மேலும் அவரைப் போல் வாழ அவர் கொடுத்த சுயமரியாதையை, சுதந்திரத்தை இழந்தோமோ - அப்போதே நாம் இப்படி மாறிவிட்டோம். நன்கு கவனியுங்கள் இறைவனின் படைப்புகளில் "மனிதன் மட்டுமே" சுய நலத்தில் சிக்கிச் சுழல்கின்றான்.

இறைவன் நாம் பிறர்க்கு செய்யும் எந்த ஒரு சிறு உதவியையும் உடனுக்குடன் பன்மடங்காக ஆசீர்வதிக்கின்றார். உதாரணம் 5000-ம் பேருக்கு உணவளிக்க காரணமான சிறுவனின் அன்பளிப்பு.

முதலில் இறைவன் நமக்குத் தந்துள்ள அடையாளங்களை, பெற்றுக் கொண்ட அழைப்பிற்கு ஏற்ப(எபே-4-1) பெருமைப்படுத்தி வாழ வேண்டும். வெரோணிக்காளாய் வாழ கிடைத்த அழைப்பை பயன்படுத்த வேண்டும்.

**செபம் :-** "கிடைக்கும் வாய்ப்புகளில் கைமாறு கருதாமல் கடையோன் வரை உதவிட கருணை புரியும் இறைவா"

எங்கள் பேரில் தயவாயிரும் ....

**என்னோடு என் சிலுவை -6**

## 7-ம் நிலை " இயேசு இரண்டாம் முறை மண்ணில் விழுகின்றார்"

திவ்விய இயேசுவே ...

நம்பிக்கையுள்ள செபமும், உடலை வறுத்தும் நோன்பும் உயிர்காக்கும் உணவு.

இறை வார்த்தையை கண்டும் காணாமலும், கேட்டும் கேளாமலும் போனது நம்முடைய முதல் வீழ்ச்சி. நமக்கு மீண்டும் வாழ்வும் உணவுமாக வந்த அந்த இறைவார்த்தையை சிறிதளவாவது நமது உடலை வருத்தி நோன்பு இருந்து செபித்து நமக்குள் ஏற்றுக் கொள்ளாதது நமது இரண்டாம் வீழ்ச்சி.

இறைமகன் கூட 40 நாட்கள் பாலைவனத்தில் மனுக்குல மீட்பை தருவதற்காக செபத்துடனும் நோன்புடனும் இருந்தார் என மத்தேயு, லூக்கா- 4-1ல் கூறுகின்றார்கள்.

நமது அன்றாட வாழ்வில் நாம் இயேசுவை காண விரும்பினாலும் நாம் இருக்கும் இடத்தை விடாமல் - பயணிக்கும் பாதையை மாற்றh மல் இருப்பதால் இறைவனை காண முடியாது போகின்றது.

இயேசுவை காண வேண்டும் என நினைத்த சக்கேயு, தான் இருந்த இடத்தை விட்டு எழுந்து, குள்ளமாகவும், பருமனாகவும், இருக்கும் தனது உடலை கஷ்டப்படுத்தி காட்டு அத்தி மரத்தில் ஏறி உயரத்தில் அமர்ந்தது -அவருடைய நோன்பு. இயேசு தன்னை கடந்து செல்லும் போது அமைதி காத்து இருந்தது அவருடைய செபம்.

இதே போல்- எப்பாடு பட்டாவது கூட்ட நெரிசலில் வரும் இயேசுவை தொட பெரும்பாடுள்ள பெண் எழுந்து வந்து அக்கூட்டத்தின் மத்தியில் இடிபாடுகள் வேதனைகள் பட்டு இயேசுவை தொட்டது இப்பெண்ணின் நோன்பு. எனது முயற்சியில் அவருடைய ஆடையின் விழிம்பை தொட்டாலே குணம் பெறுவேன் என நம்பியது அவளுடைய செபம்.

இது தனி மனித மீட்பு, அதே போல் மீட்பு பெற்ற நாம் பிறருக்காகவும் இந்த மீட்பை தந்திட மாற்கு (2:1-12)ல் நால்வர் திமிர்வாதம் கொண்டவரை கட்டிலோடு சுமந்து வந்து, வீட்டின் கூரையை பிரித்து வழி உண்டாக்கி இயேசுவின் முன் இறக்கினர் என்று படிக்கின்றோம்.

மீட்பு நமக்கு என்றாலும் பிறர்க்கு என்றாலும் செபமும், நோன்பும் தேவை என நாம் அறிகின்றோம். அதே போல் இந்த செபமும், நோண்பும், காற்று உள்ள இடத்தில் கைகள் இணைந்தால்தான் ஒலி எழுப்பப்படுவது போல் இயேசு உள்ள இடத்தில் இணைய வேண்டும். மீட்பு ஆலயமணியாக நமது காதுகளில் மட்டுமல்ல அனைவரின் காதுகளிலும் இன்ப தேனாக ஒலிக்கும்.

**செபம்** :-இறைவா எனது சிந்தனைகளையும் (செபங்களையும்) உடல் பிரயாசைகளையும் (நோன்பையும்) ஒன்றாக இணைத்து உம்மோடும், அனைவரோடும் வாழ அருள்தாரும்.

எங்கள் பேரில் தயவாயிரும் ....

## 8-ம் நிலை -"எருசலேம் நகர பெண்களுக்கு இயேசு ஆறுதல் கூறுகின்றார்"

திவ்ய இயேசுவே...

இரக்கப்படவேண்டும் "அதே நேரம்" இயன்றதைச் செய்யவும் வேண்டும்.

லூக் 23-28 ல் திரளான மக்கள் கூட்டமும் அவருக்காக மாரடித்து புலம்பும் பெண்களும் இயேசுவை பின் தொடர்ந்தனர். இயேசு அப்பெண்கள் பக்கம் திரும்பி எருசலேம் மகளிரே எனக்காக அழாதீர்கள், உங்களுககாகவும் உங்களுடைய பிள்ளைகளுக்காகவுமே அழுங்கள் என்றார்.

அங்கே பாருங்கள் அவர்கள் அழுதே சாதித்து விட்டனர் - என்ற வழக்கச் சொல் அழுகையின் வல்லமையைக் கூறுகின்றது. அதே போல் அழுபவர் காதில் அழாதே என்ற சொல் ஒலிக்கும் போது அவர் பெறும் ஆறுதல் மற்றும் அமைதி அற்புதமானது. யூத பெண்களுக்கும் இயேசுவின் வார்த்தை இந்த அற்புதத்தை தந்தது. அது மட்டுமல்ல இனி என்றும் எவரும் அழாமல் இருக்க அறிவுரையும் தரப்பட்டன. இங்கு நாம் கவணிக்க வேண்டியது - இயல்பாகவே நாம், யூத பெண்கள் போல பிறர்துன்பங்களை கண்டு மனம் வருந்துகின்றோம்.. அதே வேளையில் இயேசுவைப்போல் அத்துன்பங்கள் மேலும் தொடராமல் இருக்க எச்சரிக்கையும் செயல்திட்டமும் தேவை என்பதையும், அறிந்து கொள்ள வேண்டும்..

இன்றைய நமது வாழ்க்கை முறையில், இயேசுவைப் போல் துன்பத்தில் அல்ல, நிறைவான சமாதான மகிழ்ச்சியான வாழ்க்கையில் அடுத்தவரைப் பார்த்து, நின்று - அவரோடு பேசி - அவருடைய கருத்துக்களுக்கு மதிப்பு தருகின்றோமா? இன்று நேருக்கு - நேர் முகம் காணாத மனித உறவுகள் அதிகம். மனித உறவுகள் மட்டுமல்ல - இறைவன் - மனித உறவும் இப்படிதான். வளமான வாழ்க்கையில் நமது உள்ளத்தின் உயிரான தேவனை நினைக்கவும் நேரமில்லை, ஆலயம் சென்று முகமுகமாய் தரிசிக்க அவகாசமும் இல்லை.

எவ்வளவு அவசரமாக வாழ முயற்சித்தாலும் குறிக்கப்பட்ட காலத்திற்கு மேல் யாரும் மூச்சுவிட முடியாது. அன்று இயேசுவின் கண் முன் அவரது மரணம் நின்றபோது அவர் நின்று பிறர்அழுகுரல் கேட்டு அவர்களுக்கு ஆறுதல் தந்திட தயங்கவில்லை. பிறருக்கு ஆறுதல் தருவது நமது கடமை என்று செயலில் காட்டினார்.

நம்மைச் சுற்றி, நம்மை அன்பு செய்த அன்பு உள்ளங்கள் - நமது ஆறுதலான வெறும் வாய் வார்த்தைக்காக காத்திருப்பதை மறுக்க முடியுமா? பள்ளியில் இருந்து வீடு திரும்பும் பிள்ளைகள் தேடும் பெற்றோர்களின் ஆறுதலும் அரவணைப்பும் எங்கே ஒளிந்து கொண்டது? காணொளிப்பெட்டி நிகழ்ச்சிகளுக்கும் விருந்து கேளிக்கைகளுக்கும் இன்று நாம் ஒதுக்கும் நேரத்தில் - தசமபாகமாவது இவர்களுக்கு தந்தோம் என்றால், ஆறுதலைத் தேடும் அன்பு உள்ளங்களுக்கும், அரவணைப்பை நாடும் பிள்ளைகளுக்கும் எத்தனை மகிழ்ச்சி கிடைக்கும். யோசிப்போம்!

இது - ஒரு உதாரணம் தான் இன்னும் ஆயிரம் உண்டு - நின்று திரும்பிப் பார்ப்போம்.
இயேசுவாக வாழ முயற்சிப்போம்.

**செபம் :-** யூத பெண்களைப்போல் பிறர்துன்பங்களைக் கண்டு வருத்தப்படவும் இயேசுவைப் போல் அவர்களுக்கு ஆறுதல் தரவும் அருள் தாரும்

எங்கள் பேரில் தயவாயிரும்…



## 9-ம் நிலை:- "இயேசு மூன்றாவது முறை கீழே விழுகின்றார்"

திவ்ய இயேசுவே…

"ஆள் மாறாட்டம் வேண்டாம் - ஆண்டவர் மட்டும் போதும்"

இறை வார்த்தையை கண்டும் காணாமல், கேட்டும் கேளாமல் போனது நமது முதல் வீழ்ச்சி. நானே உயிர், நானே வாழ்வு என்று நம்முன் வந்த இறைவார்த்தையை உடலை வளைத்து, வருத்தி உள்வாங்காமல் போனது நமது இரண்டாம் வீழ்ச்சி. கடைசியாக கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்ற தான் தோன்றித்தனமான நம் வாழ்வு நமது மூன்றாவது முழுமையான வீழ்ச்சி ஆகும்.

இந்த முழு வீழ்ச்சியில் - இருந்து எழுந்திட, முழு இறை அனுபவம் ஒன்று தான் வழி. வாருங்கள் கெத்சேமனிக்குள் நுழைவோம். இயேசுவோடு அந்த இறை அனுபவத்தை பெற்றுக்கொள்வோம். கல்வாரியைப் போன்ற மரண வீழ்ச்சி கண் முன் நிற்கும் போது அதைக் கடந்திட நமது சித்தமல்ல, இறை சித்தம் மட்டுமே பயன் தரும் என்று, நமக்கு மண்டியிட அழைப்பு தருகின்றார்.

அந்த இறை சித்தத்தை முழுமையாக பெற்றுக்கொள்ள, தனது உடலை, தன் ஐம்புலன்களை, தந்தையை நோக்கி ஒரு முகப்படுத்தி, அதுவும்தன் இரத்தமே வியர்வையாக வெளிப்படும் அளவிற்கு -மனதுருகி, முகம் குப்புற விழுந்து -3 முறை ஜெபித்து , இறைவனுக்கு கீழ்படிந்து - இறை சித்தத்தை தனதாக்குவது எவ்வாறு என செய்து காட்டுகின்றார். அதே நேரம், திருவிருந்தில் உண்ட மயக்கத்தில், உறங்கும் சீடர்களைப் பார்த்து - நம்மைப் பார்த்து, உங்கள் ஆவி ஊக்கம் உள்ளதுதான், ஆனால் ஊண் உடலோ - வலுவற்றது - எனவே, விழித்திருந்து ஜெபிக்க எச்சரிக்கின்றார்.

பேதுரு, யூதாசு இருவரும் இறைவார்த்தையோடு இருந்த போதும், இல்லாத போதும், என்ன நடந்தது என்பதை தியானிப்போம். பேதுரு - திருவிருந்து, கெத்சேமனி, அரண்மனை முற்றம் என தொடர்ந்து "இயேசுவோடு இணைந்து இருந்ததால்" , பேதுருவே இன்று நீ என்னை மூன்று முறை மறுதலிப்பாய் என்ற இயேசுவின் வார்த்தைகள் அவரில் நிறைவேறியபோது -'வார்த்தையின் பார்வை' அவரை மனம் வெதும்பி அழச் செய்தது. முடிவு 'இரத்த சாட்சியாக' மரணிக்கும் நிலைக்கு மனஎழுச்சியும் தைரியமும் பெற்றார்.

யூதாசு - திருவிருந்தின் போதே "வார்த்தையை விட்டு விலகி வெளியே சென்று" தான்தோன்றித்தனமாக முடிவு எடுத்தான் - விளைவு இன்றே, நீ என்னை காட்டிக் கொடுப்பாய் என்ற இறைவனின் வார்த்தை அவரில் நிறைவேறியபோது 'தனது தோல்வியை' ஏற்றுக்கொண்டான். உலகத்தின் பார்வையில் "காட்டி கொடுத்தவன் ஆனான்" மனம் வருந்தினான் ஆனால் முடிவை மீண்டும் தான்தோன்றித்தனமாக எடுத்ததால் நான்று கொண்டு இறந்தான்.

இருவரும் தங்கள் செயலுக்காக மிகவும் மனம் வருந்தினார்கள் உண்மைதான். யாரிடம் - பேதுரு - இயேசுவிடமும், யூதாசு யூத மத குருக்கள் முன்பும் மன வருத்தத்தை வெளிப்படுத்தினார்கள்.

இந்த 'இயேசு', 'யூத மத பெரியோர்' என்ற 'ஆள் மாறாட்டம்' பேதுருவிற்கு வேதசாட்சி என்ற மகிமையையும் யூதாசிற்கு காட்டிக் கொடுத்தவன் என்ற இழிவையும் தந்தன.

நமது வீழ்ச்சி யூதாசைப் போன்று இருந்தாலும் முடிவு பேதுருவைப் போல் இறைவார்த்தையோடு இணைந்து இருக்கட்டும்.

“இறைவனா? உலகமா? என்ற ஆள்மாறாட்டம் வேண்டாம். நமது மன மாற்றத்திற்கு இறைவன் மட்டுமே வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வோம்.

**செபம் :-** இறைவனா? உலகமா? என்ற கேள்விக்கு முன் - நாங்கள் பேதுருவைப் போல் உம்மோடு இறக்கும் தறுவாயிலும் இணைந்து இருக்க அருள் தாரும்.

எங்கள் பேரில் தயவாயிரும்...

**என்னோடு என் சிலுவை -9**

## 10-ம் நிலை- “இயேசுவின் ஆடையை அகற்றுகின்றனர்”

திவ்ய இயேசுவே...

வெறுமையும், வெளிப்படையான செயலும் தேவை.

மனுக்குல மீட்பின் உகந்த காணிக்கையாக இயேசுவை தயார்படுத்த அவரது ஆடையை ரோமைப் படைவீரர்கள் அகற்றுகின்றனர். ஆண்டவரோ அமைதி காக்கின்றனர். இரண்டாம் ஆதாமான இயேசு பாவம் அற்றவர். எனவே ஆடைகள் - இறைவன் முன் தேவையில்லை. முதலாம் ஆதாமிற்கும் அவர் இறைவனுக்கு கீழ்படிந்து இருந்தவரை இலைகள் உடலை மறைக்கத் தேவைப்படவில்லை.

இறைவனுக்கு உகந்தோராய் இருக்க, வெறுமையும், வெளிப்படைத் தன்மையும், மிக மிக அவசியம் என்பதை நாம் அறிந்து கொள்வோமாக. எனவே, கீழ்படியாத ஆதாமைப் போல் நம்மை மறைத்துக் கொண்டிருக்கும் இலைகளை - பாவங்களை நாம் அகற்ற முன் வருவோம்.

முதலில் இறைவனுக்கு எதிரான - ஆணவத்தை, கீழ்படியாமையை அகற்றுவோம்.

| | | |
|---|---|---|
| **அன்புக்கு** | **எதிரான** | **கோபம்** |
| **நட்புக்கு** | **எதிரான** | **நய வஞ்சகம்** |
| **பாசத்தற்கு** | **எதிரான** | **வெறுப்பு** |
| **புகழுக்கு** | **எதிரான** | **பழி** |
| **உண்மைக்கு** | **எதிரான** | **பொய்.** |
| **கண்ணியத்திற்கு** | **எதிரான** | **புறங்கூறல்** |
| **கடமைக்கு** | **எதிரான** | **பொறுப்பற்ற தன்மை** |
| **கற்பிற்கு** | **எதிரான** | **விபச்சாரம்** |
| **ஆசைக்கு** | **எதிரான** | **பேராசை** |
| **அடைக்கலத்திற்கு** | **எதிரான** | **புறகணிப்பு** |
| **பொதுநலத்திற்கு** | **எதிரான** | **சுயநலம்** |
| **தேவைக்கு** | **அதிகமான** | **பொருளாசை** |

என நாம் நமக்கு “உள்ளும் வெளியும்” அணிந்து இருக்கும் உள்ளாடை, வெளியாடை, மேலாடை, தலைப்பாகை மற்றும் அறுவறுப்பிற்குரிய அலங்கார நகைகளையும் நமது உடலை விட்டு அகற்றிட நம்மை நமது நண்பரான விண்ணக படைவீரரான இயேசுவின் கரங்களில் அர்ப்பணிப்போம்.

ஆச்சரியம் வேண்டாம் யூதாசையே ஆண்டவர் “நண்பா” என்று தான் அழைத்தார்.

வெறுமையுடன், மறைவுகளினின்று விலகி வெளிப்படையாக உலகின் முன் - கிறிஸ்து அவர்களாக வாழ்ந்து இறைவனுக்கு உகந்த காணிக்கையாக நம்மை ஒப்புக்கொடுப்போம்.
நாம் நம்மை அர்ப்பணிக்கும் போது ஆண்டவர் இயேசு விண்ணக - படைவீரனாக, பாது காவலனாக நம்மோடு பயணிக்க நம்முன் நிற்கின்றார்.

இறைவனுக்கு கீழ்படிவோம், வெறுமை அடைவோம். விண்ணகம் பெறுவோம்

**செபம் :-** இறைவன் திருமுன் எந்த ஒழிவு மறைவு இன்றி உகந்தக் காணிக்கை ஆக்கிட நம்மைத் தாழ்த்துவோம்.

எங்கள் பேரில் தயவாயிரும்...

**என்னோடு என் சிலுவை -10**

## 11-ம் நிலை - இயேசுவை மூன்று ஆணிகளால் சிலுவையில் அறைகின்றனர்

திவ்ய இயேசுவே ...

"அன்பு - மன்னிப்பு - அரவணைப்பு என்ற மூன்று ஆணிகளில் இணைவோம்"

உரோமை படைவீரர்கள், அன்று இயேசுவை மூன்று ஆணிகள் கொண்டு பாரச் சிலுவை மீதில் துடிதுடிக்க இணைத்ததை, நினைவு கூறுகின்றோம். இயேசுவின் மீட்பை சுவைக்கும், ஒவ்வொருவரும் மறக்க இயலா, ஒரு கசப்பான நிகழ்வு இந்த சிலுவை இணைப்பு. இது மனுக்குலததிற்கு கடந்த கால நினைவு.

இன்று இந்த நிகழ்காலத்தில், பழக்க வழக்கத்தால் நாம் மீண்டும் நமது இயேசுவை சிலுவையில் அறைய வேண்டுமா - என்று கேட்டால் "ஆம் அறைய வேண்டும்" என்பது இன்றும் அதே மனிதர்களின் பதில். ஏனெனில் அன்று போல், இயேசுவின் அன்பும் , மன்னிப்பும், அரவணைப்பும் இன்றும் - இன்னும் அதிகமாகத் தேவைப்படுகின்றது.

அன்று அறுவடை அதிகம் ஆனால் வேலை ஆளாக இயேசு ஒருவர் மட்டும் இருந்தார். இன்று இயேசுவாக, கிறிஸ்தவர்களாக ஆயிரம் ஆயிரம் பேராக நாம் சிலுவை முன் நின்கின்றோம் என்பது தானே உண்மை.

தைரியமாக முன் செல்வோம், நம்மை வழிநடத்தும் பரமபிதாவின் படைவீரரான இறைமகன் இயேசுவின் கரங்களில் உள்ள அன்பு, மன்னிப்பு, அரவணைப்பு என்ற திரித்துவ மகிமையின் மூன்று ஆணிகளை கொண்டு, எத்தகைய கடினமான, விகாரமான மனங்களோடு வாழும், சிலுவைகளோடும் நம்மை இணைத்திட, அத்தகைய சிலுவைகளை அரவணைத்திட, செபம், நோன்பு, என்ற இரண்டு கரங்களை இன்னும் அதிகமாக விரித்திடுவோம்.

இப்படி விருப்பததோடு நாம் செய்கின்ற நமது விசுவாசத்தோடு இணைந்த செயலின் பலனாக் எதிர்காலத்தில் -மாற் 16:17-18 ல் உள்ளபடி இந்த மனுக்குலம் - இறை மகனில் விசுவாசம் கொண்டு உயிர்பெறுவதற்கு நாம் சாட்சிகள் ஆவோம். அப்போது அவர்கள் ஆண்டவர் பெயரால், புது மொழிகள் பேசுவதையும் பேய்கள் ஓட்டுவதையும், நஞ்சையே உண்டாலும் - நலம் பெற்று வாழ்வதையும், நோய்களை போக்குவதையும் பரமபிதா கண்டு மகிழ்ச்சி அடைவார்.

இதை கண்ணுறும் நமது பரமபிதா மத்தேயு 25:2 ன்படி "நன்று நன்று நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனே" என்று நம்மையும் பாராட்ட ஒரு வாய்பை உருவாக்குவோம்.

**செபம் :-** இறைவா நேற்று, இன்று, நாளை என காலங்கள் இயங்கினாலும், 'இன்றைய பொழுது மட்டுமே' நானே நிஜம் என என்னை அழைக்கும் போது - உமது கரங்களில் உள்ள அன்பு, மன்னிப்பு, அரவணைப்பு என்ற மூன்று ஆணிகளில் எமது கரங்களை இணைத்து செயல்பட அருள்தாரும்.

எங்கள் பேரில் தயவாயிரும்...

## 12-ம் - நிலை:- "இறைமகன் ஆவியை அர்ப்பணிக்கின்றார்"

திவ்ய இயேசுவே..

"நடந்தது நடந்துவிட்டது, இனி நடக்க வேண்டியவைகளைப் பார்ப்போம்"

இது ஒவ்வொரு மரணமும் வாழ்வோருக்குத் தரும் பாடம்.

ஆம் ஆவி பிரிந்தது, அர்ப்பணம் நிறைவு பெற்றது. இயற்கை சீரியது, இறை சித்தம் நிறைவு பெற்றது. மனுக்குல மீட்பு மரணத்தை கடந்து சென்றது. இதோ அன்றும் இன்றும் சீடர்களின் முன் நிற்கும் ஒரு கேள்வி ………… போதகர் போய்விட்டார், இனி யாருடைய போதனைகளை பின்பற்றுவது? இதற்கு சிலுவை தரும் பதிலை கவனமுடன் கேட்போம்.

கீழ்வரும் ஆறு குணங்களை உங்கள் உடமை ஆக்குங்கள் - உயிர்விட்ட இறைமகன் உங்களுள் உயிராக வருவார் என்கின்றது - கவணிப்போம்.

1. கீழ்படிதல் : இறைவனுக்கு மட்டும் இறுதிவரை கீழ்படியுங்கள். இயேசு இறுதி மூச்சு வரை இறைவனுக்கு மட்டும் கீழ்படிந்தார்- அவர் சீடர் எனும் நீங்கள் அதை மட்டும் செய்யுங்கள்.

2. உறவுகள் : மனித உறவின் மாண்பை உணர்ந்து அனைவருக்கும் ஆறுதலாய் இருங்கள். இயேசு தனது தாயையும் - அன்புச் சீடரையும் - தாய் - மகன் உறவில் ஆறுதல் பெற அழைப்பு விடுத்தார். நீங்களும் இறைவன் - மனிதன் - உலகம் என்ற முப்பரிமான உறவில் அன்பும் ஆறுதலும் ஒருவருள் ஒருவர் பெறுங்கள்;.

3. நன்மை செய்தல் : நன்மைகள் செய்திட காலமும், வேதனைகளும் தடையாக இருக்கவில்லை - இயேசுவிற்கு கள்வனை "நல்ல கள்வனாக" மாற்றிட கல்வாரியின் காலமும், வேதனைகளும் தடை செய்ய வில்லை. நன்மைகள செய்திட இனியும் தயைகூர்ந்து நாளும் நேரமும் பார்க்காதீர்கள்.

4. மன்னித்தல்: மனிதம் மகிழ்ந்திட மன்னிப்பிற்கு மீறிய மாமருந்து இல்லை. இயேசு மரணத்தின் பிடியிலும் பிதாவே இவர்களை மன்னியும் என்று பிறருக்காக மன்றாடினார். நீங்கள் - எங்களுக்கு தீமை செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல - என்று சத்தியம் செய்கிறீர்கள். இந்த வார்த்தைக்கு உண்மை உள்ளவராய் இருப்பீர்களாக.

5. அர்பணித்தல்: நிறைவு உள்ளதாகவும், நிலையானதாகவும் உங்களது அர்ப்பணம் அமையட்டும். இயேசு தனது ஆவியை முழுமையாக இறைவனிடம் அர்ப்பணித்தார். நீங்கள் உங்களிடம் நிறைவாய் உள்ள அன்பு, மன்னிப்பு, அரவனைப்பு ஆகிய பண்புகளை உலகிற்கு நிலையாக அர்ப்பணித்திட உங்களை ஆயத்தப் படுத்துங்கள்.

6. மனிதத்தில், மரணத்தில் - நிறைவு எய்தல்: இதோ இயேசு இறந்த பின் அவரது விலாவை குத்தித் திறந்தவனுக்கு - ஒளியாக - பார்வையை தந்தார். அவனும் இறைமகனை - இறைவனைக் கண்டு பரவசமடைந்தான். நீங்கள், உலகம் உங்கள் விலாவை - இதயத்தை திறக்கும் போது, அதனுள் மலர்ந்து மணம் வீசும் மனிதத்தை கண்டு பரவசமடைய பக்குவப்படுங்கள்.

இறைவனுக்கு ஆறு இலட்சணங்கள் உண்டு என சிறுவயது முதல் அறிவீர்கள். இன்று, இந்த மரசிலுவை மனிதனுக்கும் ஆறு இலட்சணங்கள் - குணங்கள் உண்டு என உறுதி செய்துள்ளது. அப்படி என்றால், இன்று நம்மை காணும் பிலாத்து மீண்டும் இதோ மனிதன் என்று அறைகூவல் விட வேண்டாமா?

வாருங்கள் பிலாத்துவிற்கு, அந்த நல்ல வாய்ப்பை வழங்குவோம்.

**செபம் :-** கீழ்படிதல் - உறவுகள், நன்மை செய்தல், மன்னித்தல், அர்பணித்தல், முடிவாக மனிதத்தில் நிறைவு செய்தல் என்ற ஆறு குணங்களுக்கு எங்களை சொந்தக்காரர் ஆக்கிய தெய்வமே, இவைகளில் உண்மையுள்ளோராய் வாழ்ந்திட வரம் தாரும்.

எங்கள் பேரில் தயவாயிரும் … **என்னோடு என் சிலுவை -12**

## 13-ம்- நிலை- " இறைமகனை அன்னையின் மடியில் வளர்த்துகின்றனர்"

திவ்ய இயேசுவே..

உம்மைத் தாங்கிய வயிறும் நீர் பாலுண்ட கொங்கைகளும் பேறு பெற்றவையே.

ஆம், எனது அன்பு மக்களே, இதோ எனது மடியில் இறைசித்தம் - கீழ்படிதல் - மனிதனாக - மகனாக படுத்திருக்கிறது. ஆண்டவர் சொன்ன வாக்கு நிறைவேறும் என விசுவசித்தவள் பேறு பெற்றவள் என்று என் உறவினள் எலிசபெத்து கூறியதும் நினைவிற்கு வருகின்றது. இன்று மனுக்குல பார்வையில் நான் பேறு பெற்றவளே சந்தேகம் இல்லை.

நாம் அனைவரும் மரணம் நிகழ்ந்த கல்வாரி மண்ணில் நிற்கின்றோம் . வருத்தம்தான் - ஆனால் யாராக, எதற்காக நிற்கின்றோம் - நாம் அறிவோமா?. மரணம் அடைந்த இடத்தில் - இறந்து போனவரின் உடல் இருக்கும் - என் மகன் இயேசு இருக்கின்றார். அடுத்து இறந்தவரின் உறவினர்கள் இருப்பார்கள் - அன்னை என நானும் அவரது சகோதரரும் இருக்கின்றோம். அப்படியென்றால் நீங்கள் எல்லோரும் - மரணவீட்டில் நிலவும் அமைதியை உடைத்து அங்கு இயல்பு நிலையை கொணரும் கூலிக்கு மாரடித்து ஒப்பரிவைத்து அழுதிட வருகின்ற மனித கூட்டம்தானே, மிகவும் நல்லது. இந்த "மரண அமைதி கலைந்து இயல்பு நிலைக்கு திரும்ப" உங்கள் உதவி வேண்டும்.

பாருங்கள் நானோ இறைவனின் அடிமை, இறைவன் சொல்வதை செய்பவள். இதோ உனது மக்கள் என்றார். அப்படியே உங்களை எனது மக்கள் என அரவணைக்க, தயாராக உள்ளேன். இயேசு - என் மகன் - இறைவனுக்கு தனது உயிரையும் தரும் அடியாள் பாருங்கள் தன் ஆவியை அர்பணித்து அமைதி காக்கின்றார். அப்படியென்றால் இதற்கு முன் இருந்த இயல்பு நிலைக்கு நாம் அனைவரும் எப்படி மாறுவது? அந்த இயல்பு நிலை - என்ன? நான் அடிமையென இறைவனை பின் தொடர்ந்ததும், இயேசு அடியாள் என அன்பு மொழிகளையும், அற்புதங்களையும் வழங்குவதுதான் எங்கள் இயல்பு நிலை. ஆக இந்த மரண அமைதியில் இருந்து -

அன்னையும் மகனையும் இயல்பு நிலைக்கு மாற்ற யார் முன் வருவது?- நீங்கள் வருகிறீர்களா? பாருங்கள் மரண வீட்டில் கூலிக்கு மாரடிக்கும் அந்த ஒப்பாரிக்கூட்டம் வந்தோருக்கும், வருவோர்க்கும் இறந்தவரின் பெருமைகளை எடுத்துக் கூறி, உற்றாருக்கும் உறவினருக்கும் இறந்தவரின் உடமைகளை குறிப்புணர்த்தி அதை பயன்படுத்தி - அனைவரும் இயல்புநிலை அடைந்திட பாடலாக அழுது கொண்டு இருப்பார்கள். முடிவில் உரிய கூலியையும் பெறுவார்கள்.

ஆம், உங்களை என்னைப் போல் அடிமையாகவோ என் மகனைப் போல் இறைவனுக்கு உயிரைத்தரும் அடியாளாகவோ - மாறிடுங்கள் என நான் அழைக்கவில்லை - மாறாக வந்தோருக்கும் இனி வருவோர்க்கும் எனது மகனின் நற்செய்தியை அறிவிக்கவும் - இறைவனை மட்டும் அன்பு செய்து - பின் தொடரும் - எனது வாழ்வை அனைவருக்கும் குறிப்புணர்த்தவும் உங்களை அன்போடு அழைக்கின்றேன். ஆம் குறைந்த பட்சம் - அந்த கூலியை - "வானக மீட்பு என்ற கூலியை" அழுதாவது பெற்றுக் கொள்ள உங்களை அன்போடு அழைக்கின்றேன்.

அப்படி நற்செய்தி அறிவித்த இறைவன், இயல்பு நிலைக்கு உங்களால் வந்தால் இதோ எனது மடியில் தாயின் மடியில் தலைசாய்த்து விண்ணக வாழ்வை சுவைக்கும் உரிமையைப் பெற்று பேறுடையவர் ஆவீர்கள். ஏனெனில் நான் பேறு பெற்றவள் என்றால், எனது மக்களாகிய நீங்களும் பேறு பெற்றவர்களே.

**செபம் :-** இறைவா நற்செய்தியை அறிவித்து, உம்மை பின் தொடரும் வாழ்வே எங்கள் இயல்பான உண்மையான வாழ்கை என்பதை அறிந்து கொண்டோம். எங்கள் நாவின் கட்டுகளை அவிழ்த்து விடும் தெய்வமே.

எங்கள் பேரில் தயவாயிரும்...



## 14-ம்-நிலை "இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்"

திவ்ய இயேசுவே...

"கருவறையும், கல்லறையும் இயேசு என்ற ஜீவ நீரூற்றின் இரு கரைகள்"

ஒரு மரண செய்தி வந்தவுடன் அதன் கூடவே மயான அமைதியும் வரும். ஆப்போது நம்முள் யார், எங்கு, எப்படி, எப்போது அடக்கம் பண்ணப் படுகிறார்? என்ற அறியாமையை அறிந்துக் கொள்ள ஆர்வமும் வரும் - இது உலக நியதி.

**யார் அவர்?**

கல்வாரி என்ற பெண்மையின், சிலுவை மரம் என்ற கருவறையினின்று, மரண வேதனை என்ற பாடுகள் பட்டு மன்னிப்பு என்ற மாண்புள்ள குழந்தையை பெற்றெடுத்து மனுக்குலத்தை மீட்பு பெறச் செய்த அந்த நீதிமானை - நூற்றுவர் தலைவன் லூக்கா 23:27 மாற்கு16-39ல் சான்று பகர்ந்த இயேசுவை அடக்கம் செய்யப் போகிறார்கள்.

**எங்கு எப்படி அடக்கம் செய்யப் போகிறார்கள்?**

யூதர்களின் வழக்கப்படி, இயேசுவிற்கு தனி சொந்த கல்லறை இருக்கவில்லை. எனவே, அருகிலேயே இருந்த தோட்டத்தில் இருந்த புதுக்கல்லறையில், அதுவும் அதுவரை யாரையும் வைத்திராத பாறையில் கடையப்பட்ட ஒரு புதுக் கல்லறையில் - அடக்கம் செய்யப்போகிறார்கள்.

பாறை என்றவுடன் சீடரான பேதுரு நினைவிற்கு வருகின்றார். அதாவது; இயேசுவிற்கு "சீடராகும் அனைவரையும் பாறை என்றும்" பொருள் கொள்வார்கள். வாருங்கள் - பாறையான நம் இதயத்தை ஒப்புரவு என்ற அருட்சாதனத்தால் குடைந்து, மனமாற்றம் என்ற இடத்தை உருவாக்கி நற்கருணை எனும் அருட்சாதனத்தால் அந்த இடத்தில் ஒளியேற்றி ஆவியின் அபிஷேகமான உறுதிபூசுதலால் - திடமும், தெய்வபயமும் உள்ள புத்தம் புதுக் கல்லறைகளாகுவோம்.

கல்லறை தேடும் அதுவும் அருகில் இருந்த தோட்டத்தில் - இந்த உலகத்தில் - யோசேப்பு- நிக்தோமு போன்ற மனுக்குலத்தின் பார்வையில் கல்லறைகளாக நம்மை மாற்றுவோம்.

அப்போது நீதிமானான இயேசுவிற்கு இவர்கள் சகல மரியாதையுடன் அதாவது அன்பு என்ற வெள்ளை போளமும், மன்னிப்பு என்ற மணம் வீசும் அகில் தூளும் காணிக்கைகளாக்கி, அரவணைப்பு என்ற வெண்துகிலால் மென்மையாக சுற்றி நமது இதயக் கல்லறைக்குள் அமைதியாக இளைப்பாற அடக்கம் செய்வார்கள்.

**எப்போது அடக்கம் செய்வார்கள்?**

இன்றே, இப்போதே அவர்கள் இயேசுவை அடக்கம் செய்தாக வேண்டும். ஏனெனில் நாளை ஆயத்த நாள் யாரும் - எதும் செய்ய முடியாது. ஆம் இன்றே நமது இதய கல்லறைகளில் இறைமகனை ஏற்றுக்கொள்வோம். நாளை என்ற கனவுகள் வேண்டாம். நம் கண் முன் நிஜமான இன்றைய பொழுதில் இப்படியே இயேசுவை ஏற்றுக் கொள்வோம்.

கேள்விகளின் பதில், நம்மில் செயல்களாக உயிர்பெறும் போது நம்மை எப்போதும்

கண்டு கொண்டு இருககும் பரமபிதா - நம்மையும் பார்த்து "**இவர்களே எனது அன்பார்ந்த மக்கள் இன்று இவர்களில் நான் பூரிப்படைகின்றேன்**" என்று நற்சான்று கூறுவார்.

**செபம் :-** இறைவா இனியாவது எங்கள் இதயக் கல்லறைகள் நீர் அமர்ந்து இளைப்பாரும் ஆலயமாக மாற்றிட உமது அருளைத் தாரும்

எங்கள் பேரில் தயவாயிரும்…………..